செ.வெ.எண்:58/ஜனவரி நாள் : 27.02.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள்**
**சென்னை தலைமைச்செயலகத்திலிருந்து காணொலிக் காட்சியின் வாயிலாக**

**இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ.11கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடம் மற்றும் ரூ.5.94 கோடி மதிப்பில் புதிய ஹாக்கி மைதானம் ஆகியவற்றை திறந்து வைத்ததைத் தொடர்ந்து,**

**இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்.**

**---------**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் இன்று (27.02.2016) சென்னை தலைமைச் செயலத்திலிருந்து காணொலிக் காட்சியின் வாயிலாக தமிழகத்தில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் புதிதாக கட்டப்பட்டுள்ள அலுவலக கட்டிடங்களை திறந்து வைத்தார்கள். இராமநாதபுரம் மாவட்டம், பட்டினம்காத்தான் ஊராட்சியில், மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் ரூ.11கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடத்தினையும், ரூ.5.94 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள வேலுமாணிக்கம் செயற்கை புல்வெளி ஹாக்கி மைதானத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் காணொலிக் காட்சியின் வாயிலாக திறந்து வைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள், புதிதாக திறந்து வைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டிடம் மற்றும் வேலுமாணிக்கம் செயற்கை புல்வெளி ஹாக்கி மைதானத்தில் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்.

இந்நிகழ்வின் போது, இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.அ.அன்வர்ராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அலிஅக்பர், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திரு.மு.சுந்தரபாண்டியன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, இராமநாதபுரம் நகர்மன்றத் தலைவர் திருமதி.சந்தானலெட்சுமி, மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.ஜெயஜோதி, ராம்கோ தலைவர் திரு.செ.முருகேசன், கூட்டுறவு பபால் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் திரு.அங்குச்சாமி, உட்பட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**